செ.வெ.எண்: 900

நாள்:- 13/10/10

பொதுத் (தேர்தல்கள்–1) துறை

## செய்தி வெளியீடு

01.11.2010–ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழ்நாடு சட்ட மேலவையின் பட்டதாரிகள் தொகுதிகள் மற்றும் ஆசிரியர்கள் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்கள் புதிதாகத் தயாரிக்கப்படுகின்றன. பட்டதாரிகள் தொகுதிகள் மற்றும் ஆசிரியர்கள் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களில் சேர்க்கப்படத் தகுதியுள்ள நபர்களை, முறையே படிவம் 18 / படிவம் 19–இல் விண்ணப்பிக்குமாறு கோரி 01.10.2010 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டது. மற்றுமொரு அறிவிப்பு 15.10.2010 அன்று வெளியிடப்படும். நிர்ணயிக்கப்பட்ட அமைவிடங்களில் படிவங்கள் கிடைக்கும்.

நிர்ணயிக்கப்பட்ட அமைவிடங்கள்

| | |
|---|---|
| மாநகராட்சிப் பகுதிகளில் | மாநகராட்சியின் மண்டல அலுவலகங்கள் |
| மற்ற பகுதிகளில் | விண்ணப்பதாரர் வசிக்கும் பகுதியின் வட்டாட்சியர் அலுவலகம் |

| | |
|---|---|
| நிர்ணயிக்கப்பட்ட அலுவலர் | வட்டாட்சியர் அலுவலகத்தில் வட்டாட்சியர் / துணை வட்டாட்சியர்<br>சென்னை மாநகராட்சியின் மண்டல அலுவலகங்களில் மேலாளர்<br>மற்ற மாநகராட்சிகளின் மண்டல அலுவலகங்களில் உதவி ஆணையர்கள் |

2. கீழ்க்கண்ட நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட அமைவிடங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளன :

16.10.2010 (சனிக்கிழமை) மற்றும் 17.10.2010(ஞாயிற்றுக்கிழமை)

30.10.2010 (சனிக்கிழமை) மற்றும் 31.10.2010 (ஞாயிற்றுக்கிழமை)

இந்நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட அமைவிடங்களில் அலுவலக நேரங்களில் நிர்ணயிக்கப்பட்ட அலுவலர்கள் இருப்பார்கள். அங்கே படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து அங்கேயே அளிக்கலாம். ஆசிரியர்கள் மற்றும் பட்டதாரிகள் ஆகிய இரண்டு தொகுதிகளின் வாக்காளர் பட்டியலிலும் சேர்த்திடுவதற்கு தகுதியான நபர்கள் தனித்தனியே படிவம் 18 மற்றும் படிவம் 19–இல் விண்ணப்பித்திட வேண்டும்.

3. ஒட்டுமொத்தமாக அளிக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. எனினும், பட்டதாரிகள் தொகுதிகளைப் பொறுத்தமட்டில், ஒரு குடும்பத்தின் மற்ற உறுப்பினர்களுக்காக அதே குடும்பத்தின் ஒரு உறுப்பினர் படிவம் 18–ஐத் தாக்கல் செய்து அவர்கள் ஒவ்வொருவரின் அசல் ஆவணங்களையும் ஆய்வுக்காக சமர்ப்பிக்கலாம். அதேபோல், ஆசிரியர்கள் தொகுதிகளைப் பொறுத்தமட்டில், தகுதியுள்ள கல்வி நிறுவனங்களின் தலைவர்கள் அந்நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களின் படிவம் 19 விண்ணப்பங்களை தனித்தனியாக பெற்று தனித்தனிச் சான்றுகளுடன் இணைத்து ஒட்டுமொத்தமாக அளித்திடலாம்.

தலைமைத் தேர்தல் அதிகாரி,
தமிழ்நாடு

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9